## பொதுக்காலத்தின் 14-ஆம் ஞாயிறு

*திருவிவிலிய வாசகங்கள்:*

*செக் 9:9-10;*

*உரோமையர். 8:9, 11-13;*

*மத்தேயு 11:25-30*

## கிறிஸ்துவைத் தேடி வரும் குடும்பம்

### முன்னுரை

ஒருமுறை ஒரு பங்குத்தந்தை, ஒரு சிறிய வாடகை வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த ஒரு வயதான பாட்டியைச் சந்திக்கச் சென்றார். அங்கே மேசையின் மீது மூன்று பொருள்கள் இருந்தன: ஒன்று பழமையான ஒரு திருவிவிலியம் மற்றொன்று அவரது குடும்பப் புகைப்படம், மூன்றாவதாக ஒரு சிறிய தோள் பை .

அந்தப் பையைப் பார்த்து சற்று ஆர்வம் கொண்ட பங்குத்தந்தை, அதைப் பற்றி அவரிடம் கேட்டார். அந்தப் பாட்டி புன்னகையோடு சொன்னார்:

"சுவாமி, என் மன பாரம் தாங்காமல் நான் தவிக்கும் போதெல்லாம், என் கவலைகள் அனைத்தையும் இந்த பைக்குள் போடுவதாக நினைத்துக் கொள்வேன். என்னால் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியாது; அதனால் என் கவலைகளை இதில் வைப்பதாக கற்பனை செய்து கொள்வேன். பிறகு, அமைதியாக அமர்ந்து, 'ஆண்டவரே, என் கவலைகளை உம்மிடம் ஒப்படைத்து விட்டேன் இனி என் கவலைகளை நீர் சுமந்து கொள்ளும்' என்று இறைவனிடம் சொல்லிவிடுவேன்." என்றார்.

அந்தப் பங்குத்தந்தை பின்னர் இதைப் பற்றிக் குறிப்பிட்ட போது: "செபத்தைப் பற்றிய ஒரு ஆழமான உண்மையை அந்தப் பாட்டி கண்டுகொண்டதை நான் உணர்ந்தேன். தன் சக்தியால் சுமக்க முடியாதவற்றை, இறைவனிடம் எப்படி ஒப்படைப்பது என்பதை அவர் கற்றுக்கொண்டிருந்தார்" என்றார்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

ஒவ்வொரு குடும்பத்திலும், உறவுகள்தான் நம் வாழ்க்கையை ஒன்றிணைத்து நடத்துகின்றன. இரத்த சொந்தம் நட்பு, விசுவாசம் மற்றும் பொதுவான அனுபவங்கள் எனப் பல வழிகளில் பிணைக்கப்பட்ட மக்களாக நாம் இன்று இங்கே கூடியிருக்கிறோம். இந்த உறவுகளில் சில நமக்கு மகிழ்ச்சியையும் பலத்தையும் தருகின்றன; ஆனால், சில உறவுகளோ மனக்கசப்பு, மௌனம் அல்லது காயங்களால் நிறைந்திருக்கின்றன.

ஆயினும், இத்தகைய யதார்த்தமான சூழ்நிலைகளுக்கு மத்தியில்தான், இறைவன் நம்மை இன்று தனது சொந்தக் குடும்பமாகக் கூட்டிச் சேர்த்துள்ளார்.

இன்றைய நற்செய்தி நம் வாழ்வோடு நேரடியாகப் பேசுகிறது:

"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." என்கிறார்.

ஆண்டவராகிய இயேசு நாம் இன்று பலவிதமான சுமைகளைச் சுமந்து கொண்டு இங்கு வந்திருக்கிறோம். நோய் நொடிகள், கடமைகள், குடும்பக் கவலைகள் போன்ற சில சுமைகள் வெளியில் தெரிகின்றன. ஆனால் மனக்கவலை,

குற்ற உணர்ச்சி, சோர்வு மற்றும் எல்லாவற்றையும் சரியாகக் கொண்டு செல்ல வேண்டும் என்ற மன அழுத்தம் போன்ற பல சுமைகள் வெளியில் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. சில நேரங்களில், விசுவாசத்தோடு வாழ்வது கூட நாம் செய்ய வேண்டிய மற்றொரு கடினமான கடமையைப் போலத் தோன்றலாம்.

ஆனால், கிறிஸ்து நம்மை விட்டுத் தூரத்தில் நிற்கவில்லை. அவர் நம் வாழ்வின் நடுவே நின்றுகொண்டு, "என்னிடம் வாருங்கள்" என்று அழைக்கிறார்.

அவர் நம்மைப் பார்த்து: "முதலில் எல்லாவற்றையும் சரி செய்துவிட்டு வா" என்று சொல்லவில்லை.

"உன் சொந்த பலத்தால் பலசாலியாக மாறிவிட்டு வா" என்றும் சொல்லவில்லை.

மாறாக, மிகவும் எளிமையாக "வா என்னிடம் " என்று மட்டும் அழைக்கிறார்.

எனவே, விசுவாசத்தால் ஒன்றிணைந்த ஒரு குடும்பமாக, நாம் யார் என்பதையும், நம்மை அமுக்கிக் கொண்டிருக்கும் சுமைகளை அவருடைய திருமுன்னிலையில் கொண்டு வருவோம்.

## மறையுரை:

“ என்னிடம் வாருங்கள், உங்கள் உள்ளங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" இயேசு

ஒருமுறை, நீண்ட தூரப் பயணத்திற்குப் பிறகு ஒரு பயணி பரபரப்பான ஒரு சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவருடைய இரண்டு கைகளிலும் இரண்டு கனமான பெட்டிகள் இருந்தன. அதில் ஒரு பெட்டியின் சக்கரம் உடைந்திருந்ததால், அவர் சில அடிகள்

நடக்கும்போதெல்லாம் அது பக்கவாட்டில் இழுத்துக் கொண்டு ஓடியது; அதை அவர் கஷ்டப்பட்டு நேராக்க வேண்டியிருந்தது. அவருடைய முதுகில் ஒரு தோள் பையும் கையில் ஒரு கணினிப் பையும் இருந்தன. அதோடு, ஒருவருக்குக் கொடுப்பதற்காகப் பாரமரித்து எடுத்து வந்த ஒரு பரிசுப்பொருள் அடங்கிய பெட்டியையும் அவர் கஷ்டப்பட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில், அவரால் அதற்கு மேல் நடக்க முடியாமல் விமான நிலையத்தின் நடுவிலேயே அப்படியே நின்றுவிட்டார். அவர் மிகவும் சோர்வாக இருப்பதை கவனித்த அங்கிருந்த விமான நிலைய ஊழியர் ஒருவர், இயல்பாக அவரிடம் வந்து சொன்னார்: "உங்களிடம் இருக்கும் இந்தச் சுமைகளில் சிலவற்றை நீங்கள் கீழே இறக்கி வைக்கலாம், தெரியுமா?"அதோடு எங்களைப் போன்றவர்களின்

உதவியையும் நாடலாம் என்றார்

அதற்கு அந்தப் பயணி, "என்னால் முடியாது, இவை எல்லாமே எனக்கு மிக முக்கியமானவை" என்றார்.

அந்த ஊழியர் புன்னகைத்துவிட்டு, "இருக்கலாம். ஆனால், இவை எல்லாவற்றையும் நீங்கள் இப்படி கஷ்டப்பட்டு சுமக்க வேண்டும் என்று அவசியமில்லை" அதற்கு வேறு வழி உள்ளது என்றார்.

இந்த ஒரு நிகழ்வு, இன்றைய நற்செய்தி நமக்குச் சொல்லும் ஆழமான உண்மையை அப்படியே பிரதிபலிக்கிறது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

நாம் அனைவரும் ஏதோ ஒரு சுமையைச் சுமந்து கொண்டுதான் இருக்கிறோம் – சில சுமைகள் அவசியமானவை, சில சுமைகளை நாமே தேடிக்கொண்டவை, இன்னும் சில சுமைகளோ நம்மை அறியாமலேயே நம்மை நசுக்கிக் கொண்டிருப்பவை. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இயேசு நம்மோடு பேசுகிறார். மனித அறிவுக்கு எட்டாத, வியப்பான இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்

"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

அவர் நமக்கு ஏதோ ஒரு ஆலோசனையையோ, ஒரு திட்டத்தையோ, அல்லது ஒரு புதிய வழிமுறையையோ தரவில்லை. மாறாக, ஒரு பாசமான அழைப்பைத் தருகிறார்: "என்னிடம் வாருங்கள்".

## இயேசு முற்றிலும் வித்தியாசமாக வரும் அரசர்

இறைவன் கொடுக்கும் இந்த அழைப்பைப் புரிந்து கொள்வதற்கான முதல் திறவுகோலை இறைவாக்கினர் செக்கரியா நமக்குத் தருகிறார். அவர் ஒரு அரசரைப் பற்றி இவ்வாறு அறிவிக்கிறார்:

இதோ, உங்கள் அரசர் உங்களிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்; வெற்றிவேந்தர்; எளியவர்; எப்படயெனில்

கழுதையின்மேல், ஆம், கழுதைக் குட்டியின்மேல் ஏறி வருகிறவர்."

இயேசுவின் காலத்தில், இது பார்ப்பதற்கு விசித்திரமாகத் தோன்றியிருக்கும். எனெனில்

அரசர்கள் பொதுவாகப் போர்க் குதிரைகளின் மீதுதான் அமர்ந்து வருவார்கள்; அது போரையும் அதிகாரத்தையும் குறிக்கும். ஆனால், இந்த அரசரோ கழுதையின் மீது வருகிறார். கழுதை என்பது அமைதி, சுமை சுமத்தல் மற்றும் அன்றாட எளிய வாழ்வைக் குறிக்கும் ஒரு விலங்கு.

வரலாற்றாசிரியர் ஒருவர் இதைக் குறிப்பிடும்போது: "மாசிடோனிய மன்னன் அலெக்சாண்டர் போன்ற பேரரசர்கள் ஒரு பகுதியைக் கடந்து செல்லும் போது, மக்கள் அவர்களுக்குப் பணிந்து குனிந்து போக வேண்டும், இல்லையென்றால் முற்றிலும் நசுக்கப்படுவார்கள்.

ஆனால் செக்கரியா சொல்லும் இந்த அரசரோ அப்படிச் செய்வதில்லை. அவர் முற்றிலும் மாறுபட்டவராக வருகிறார். அமைதியாக, தாழ்ச்சியோடு, மக்களுக்கு மிக நெருக்கமாக வருகிறார்" என்கிறார்.

இயேசுவின் வாழ்வில் இந்த இறைவாக்கு நிறைவேறுவதை நற்செய்தி நமக்குக் காட்டுகிறது. அவர் எருசலேமுக்குள் நுழைந்தபோது இராணுவப் படைகளோடு வரவில்லை; மாறாக, மக்கள் கூட்டத்தோடு குருத்தோலை ஏந்தி கண்ணீருடன் நுழைந்தார். அவர் மக்களை அடக்கி ஆள வரவில்லை, மாறாகத் தன் அன்பினால் மக்களை மீட்க வந்தார்.

இது மிக முக்கியமானது. ஏனெனில், "என்னிடம் வாருங்கள்" என்று நம்மை அழைப்பவர் தூரத்தில் இருக்கும் ஏதோ ஓர் ஆட்சியாளர் அல்ல. அவர் தன் மக்களோடு சேர்ந்து இந்த வாழ்க்கைப் பயணத்தில் நடக்கும் ஒரு மாபெரும் அரசர்.

## நாம் உணராத சில மனச் சுமைகள்

மனித வாழ்க்கையின் எதார்த்தமான ஒரு பகுதியை இயேசு சுட்டிக்காட்டுகிறார், அதுதான்: 'சுமைகள்.

நம் வாழ்வில் சில சுமைகள் வெளியில் நன்றாகத் தெரியும்: நோய் நொடிகள், துக்கம், பண நெருக்கடி, குடும்பத்தில் உள்ள மனக்கசப்புகள் போன்றவை. ஆனால், வெளியில் தெரியாத, அதே சமயம் நம்மைப் பாதிக்கும் சில சுமைகளும் இருக்கின்றன: அவை வாழ்வில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயம், தோல்வி அடைந்து விடுவோமோ என்ற பயம், மற்றும் எப்போதும் எல்லாவற்றையும் சாதிப்பவர் போலக் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயம்.

இன்றைய நவீன உலகிற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால்: நாம் எப்போதும் டிஜிட்டல் உலகை ஆளும் மொபைல், மற்றும் சமூக ஊடகங்களில் மூழ்கியிருப்பது – தொடர்ந்து வரும் குறுஞ்செய்திகள், மற்றவர்களின் எதிர்பார்ப்புகள், மற்றும் நம்மை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது போன்றவை. உளவியலாளர் ஒருவர் இதை "எப்போதும் கட்டாயம் தொடர்பில் இருக்க வேண்டிய கொடுமை" என்று அழைக்கிறார்; அதாவது, நாம் முழுமையாக ஓய்வெடுக்க நமக்கு நாமே அனுமதிப்பதில்லை என்ற உணர்வு.

ஆன்மீக ரீதியிலான சுமைகளும் உண்டு: நம் மனதை விட்டு அகலாத குற்ற உணர்ச்சி, "நான் இன்னும் தகுதியானவனாக மாறவில்லையே" என்று இறைவனுக்கு முன்பாகக் கூட ஏங்குவது.

சில நேரங்களில், நாமும் நம்மை அறியாமல் அந்த விமான நிலையப் பயணியைப் போல

மாறிவிடுகிறோம் – தனியாகச் சுமக்கக் கூடாத பல சுமைகளை நம் தோள்களில் சுமந்து கொண்டு தவிக்கிறோம்.

“ என்னிடம் வாருங்கள்" என்பது இயேசு கிறிஸ்துவின் கட்டளையல்ல, அது ஒரு திறந்த வாசல்!

இயேசு நம்மைப் பார்த்து, "முதலில் உன் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொண்டு என்னிடத்தில் வா" என்று சொல்வதில்லை. "முதலில் நீ பலசாலியாக மாறிவிட்டு என்னிடத்தில் வா" என்றும் அவர் கட்டளையிடுவதில்லை. அவர் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: "என்னிடம் வா".

நற்செய்தியை நாம் வாசிக்கும் போது நாம் அறிந்து கொள்வது மக்கள் அப்படியேதான் செய்தார்கள்:

பல ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் அவதிப்பட்ட பெண், அவருடைய ஆடையின் விளிம்பைத் தொட்டாள்.

தொழுநோயாளர், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டிருந்த நிலையிலும் அவரிடம் வந்தார்கள்.

சக்கேயு, இயேசுவை ஒருமுறைப் பார்த்துவிட மாட்டோமா என்ற ஏக்கத்தில் அத்தி மரத்தின் மேல் ஏறினார்.

சிலுவையில் தொங்கிய கள்வன் ஒருவன் கூட, தன் கடைசி மூச்சில் இயேசுவின் பக்கம் திரும்பினான்.

இவர்களில் யாருடைய வாழ்க்கையும் நிறைவாக இருக்கவில்லை. அவர்கள் தங்களின் தேவையோடும், பலவீனத்தோடும்தான் வந்தார்கள். இதன் மூலம் ஒரு எளிய உண்மை நமக்கு வெளிப்படுகிறது: விசுவாசம் என்பது நம் சாதனைகளில் தொடங்குவதில்லை; அது நாம் இறைவனை நோக்கி எடுத்து வைக்கும் எளிய அடியில் தொடங்குகிறது.

ஆரம்பகால கிறித்தவத் துறவிகளின் வாழ்வில் ஒரு அழகான கதை உண்டு. இளம் துறவி ஒருவர் தன் குருவிடம், "நான் கடவுளைக் கண்டடைய என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர் மிக எளிமையாக, "உன்னை அதிகமாக அன்பு செய்யும் இடத்திற்குப் போ" என்றார்.

இயேசுவும் நமக்கு அதைத்தான் சொல்கிறார்: "நீ ஏற்கனவே அளவுகடந்து அன்புக்கடலாக நேசிக்கப்படும் இடமாகிய 'என்னிடம்' வா." என்று அவர் அன்புடன் அழைக்கிறார் மேலும் எல்லாவற்றையும் மாற்றியமைக்கும்

“நுகம்"(ஏர்  அல்லது மாட்டு வண்டியை காளை மாடுகளுடன் இணைக்கும் ஒரு மரத்தடி) என்ற ஒரு ஆச்சரியமான உருவகத்தைப் பயன்படுத்துகிறார்:

இயேசு சொல்கிறார் நான் சாந்தமும் மனத்தாழ்மையுடனும் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்... ஏனெனில் என் நுகம் மென்மையானது; என் சுமை இலகுவானது."

பொதுவாக 'நுகம்' (ஏர் )என்றால் கட்டுப்பாடு, கடின உழைப்பு மற்றும் பாரத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்று பொருள் கொள்ளலாம்

ஒரே திசையில் இழுப்பதற்காக இரண்டு எருதுகள் ஒன்றாக இந்த நுகத்தால் பிணைக்கப்படும்.

ஆனால் இங்கே ஒரு முக்கிய ரகசியம் இருக்கிறது: "இந்த நுகத்தை நீ தனியாகச் சுமக்க வேண்டும்" என்று இயேசு சொல்லவில்லை.

விவசாயத்தில் ஒரு எளிய வழக்கம் உண்டு: ஒரு பலமான மாடு தனியாக ஏர் உழும்போது சீக்கிரமே சோர்வடைந்துவிடும். ஆனால், அதைவிட பலம் வாய்ந்த மற்றொரு மாட்டோடு அதை நுகத்தடியில் பூட்டும்போது, அந்தப் பெரிய மாடு சிறிய மாட்டின் சுமையைத் தாங்கிக் கொள்ளும். சுமை இரண்டாகப் பிரிக்கப்படும். அப்போது பயணம் எளிதாகும்.

நற்செய்தியும் நமக்கு இதையேதான் சொல்கிறது: உங்கள் வாழ்க்கைச் சுமையை இனி நீங்கள் தனியாகச் சுமக்கப் போவதில்லை.
உங்களுடனேயே இருந்து இயேசு அதைச் சுமக்கிறார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் அடியாரும் இதையே எதிரொலிக்கிறார்:

பவுல் அடியார் சொல்குறார்

இயேசுவை இறந்தோரிலிருந்து உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருக்கிறது."

கடவுள் நம் துயரங்களை எங்கோ தூரத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பதில்லை. மாறாக நம் போராட்டங்களின் நடுவே அவர் ஏற்கனவே நம்மோடு இருக்கிறார்.

அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை பத்திரிகையில் எழுதினார்: "என் சொந்த அறிவுத்திறன் பற்றாமல் போன பல தருணங்களில், நான் ஆண்டவரிடம் மண்டியிட்டு அழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். ஆனால், அந்தத் தருணத்தில்தான், எனக்குள் இல்லாத ஒரு புதிய பலத்தை இறைவன் மூலம் நான் கண்டடைந்தேன்."

அறிஞர்களுக்கு மறைக்கப்பட்டு "குழந்தைகளுக்கு" வெளிப்படுத்தப்படுவது ஏன்?

இயேசு தொடர்ந்து தந்தையைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே வருகின்றார்

ஏனெனில் இந்த ஆன்மீக உண்மைகள் "அறிஞர்களுக்கும் விவேகிகளுக்கும்" மறைக்கப்பட்டு, "குழந்தைகளுக்கு" வெளிப்படுத்த பட்டு உள்ளது

இது மனித அறிவைக் குறைத்து மதிப்பிடுவதல்ல. மாறாக, "நான் சுயபலத்தால் எல்லாவற்றையும் சாதிப்பேன்" என்ற அகந்தையைக் கண்டிப்பதாகும்.

ஒரு குழந்தை தன் வாழ்க்கையைத் தன் கட்டுப்பாட்டில் வைக்க நினைப்பதில்லை; மாறாக, அது எல்லாவற்றையும் திறந்த மனதோடு பெற்றுக்கொள்கிறது. நற்செய்தியில் ஒரு மெல்லிய நகைமுரண் உள்ளது: தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்கள், சில நேரங்களில் மிக முக்கியமான உண்மைகளைத் தவறவிட்டு விடுகிறார்கள்.

## இன்றைய காலத்திற்கு ஏற்ற ஒரு உதாரணம்

ஒரு ஓவியத்தை ஆராய்ந்து, அதன் நுணுக்கங்களை விமர்சனம் செய்வதிலேயே குறியாக இருக்கும் ஒரு நபரால், அந்த

ஓவியத்தின் அழகை மனதார ரசிக்க முடிவதே இல்லை.

அதுபோல விசுவாசம் என்பது கடவுளைப் பற்றிப் படித்து ஆராய்வதல்ல; அது கடவுளை நம் வாழ்வில் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகும்.

## இயேசு தரும் இளைப்பாறுதல்

இயேசு நமக்கு உண்மையாகவே என்ன வாக்குறுதி அளிக்கிறார்?

பிரச்சனைகளில் இருந்து தப்பி ஓடும் வழியையா? அல்லது போராட்டமே இல்லாத ஒரு வாழ்க்கையையா? இல்லை!

அவர், "உங்கள் உள்ளங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றுதான் கூறுகிறார்.

இந்த இளைப்பாறுதல் என்பது தூங்குவதோ அல்லது கடமைகளில் இருந்து விலகி ஓடுவதோ அல்ல. திருப்பாடல்கள் கூறுவது போல,

"பசும்புல் வெளிக்கும், அமைதியான நீர்நிலைகளுக்கும்" நம்மை அழைத்துச் சென்று, நம் உள்ளத்தை ஆன்மீக ரீதியாகப் புதுப்பிப்பதாகும்.

பாலைவனத்தில் இருக்கும் ஒரு சோலை வனத்தை நினைத்துப் பாருங்கள். அந்தச் சோலை வனத்தால்

பாலைவனம் மறைந்துவிடுவதில்லை, ஆனால் அங்கே தண்ணீர் இருப்பதால் அந்தப் பாலைவனத்திலும் வாழ்வது சாத்தியமாகிறது.

பல கிறித்தவர்கள் இந்த உண்மையை அன்றாட வாழ்வில் உணர்கிறார்கள்: அதிகாலையில் சொல்லும் ஒரு எளிய ஜெபம்.

கடினமான ஒரு நாளின் முடிவில் கடைப்பிடிக்கும் அமைதி, நம் குறைகளைக் கொட்டும்போது யாராவது ஒருவர்

நமது குறைகளை உண்மையாகக் காதுகொடுத்துக் கேட்கும் அந்த நிமிடம்.

மத போதகர் ஒருவர் சொன்னது போல: "ஜெபம் என்பது வாழ்க்கையிலிருந்து நேரத்தை ஒதுக்குவது அல்ல; மாறாக, ஓடிக்கொண்டிருக்கும் நேரத்திற்குள் உண்மையான ஜீவன் என்ற வாழ்வைக் கண்டடைவதாகும்."

சிலுவையை முதலில் சுமந்த அரசர்

நற்செய்தியின் இறுதி ஆழம் இதுதான்: இயேசு நமக்கு இளைப்பாறுதலைத் தருவது மட்டுமல்ல, அவரே அந்த இளைப்பாறுதலின் வழியாக மாறுகிறார்.

ஏனெனில், இந்த உலகத்தின் மிகக் கனமான சுமைகளான புறக்கணிப்பு, வேதனை, மற்றும் சிலுவைச் சாவு ஆகியவற்றை அவரே முதலில் சுமந்தார்.

எனவே, அவருடைய அழைப்பு வெறும் வார்த்தை அல்ல, அது அவர் வாழ்ந்து காட்டிய உண்மை.

அவர் நம்மைப் பார்த்து, "நான் போகாத ஒரு வழிக்கு நீங்கள் போங்கள்" என்று சொல்லவில்லை.

மாறாக, "நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வாருங்கள்" என்கிறார்.

அவர் எப்போதும் எங்கே இருக்கிறார் தெரியுமா? சுமை சுமந்து தவிக்கும் மக்களின் மத்தியில்தான் அவர் இருக்கிறார்.

## ஒரு குட்டிக்கதை

ஒரு மலைப்பயண வழிகாட்டி மலையேறும் வீரர்களை ஒரு கடினமான மலை உச்சிக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார். அந்த வீரர்களில் ஒருவர், தன் கனமான பைகள் மற்றும் உபகரணங்களைத் தானே சுமப்பேன் என்றும், யாருடைய உதவியும் தனக்கு வேண்டாம் என்றும் பிடிவாதமாகக் கூறினார். மலை மேலே செல்லச் செல்ல, அவர் மிகவும் சோர்வடைந்து, வேகம் குறைந்து, ஒரு கட்டத்தில் மயங்கி விழுந்தார்.

அந்த வழிகாட்டி அமைதியாகச் சென்று, அவருடைய பைகளிலேயே மிகவும் கனமான பையை எடுத்துத் தன் தோளில் மாட்டிக்கொண்டார். பிறகு அவரிடம் சொன்னார்: "நீ இன்னும் மலையேறிக் கொண்டுதான் இருக்கிறாய். ஆனால், நினைவில் கொள், இனி நீ தனியாக ஏறவில்லை."

எங்களோடு பயணிக்கிறாய்

அதன் பிறகும் அந்த மலைப்பயணம் ஒன்றும் எளிதாக மாறிவிடவில்லை. ஆனால், அவரால் தொடர்ந்து ஏறி இலக்கை அடைய முடிந்தது.

## இதுதான் நற்செய்தி!

இயேசு நம் வாழ்வின் எல்லாச் சுமைகளையும் அப்படியே அப்புறப்படுத்தி விடுவதில்லை

ஆனால், அவற்றை நாம் தனியாகச் சுமந்து நசுங்கிப் போவதை அவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

அதனால்தான், இயேசு இன்றும் நம்மைப் பார்த்து அன்போடு அழைக்கிறார்:

"என்னிடம் வாருங்கள்... உங்கள் உள்ளங்களுக்கு
நான் எப்போதும் இளைப்பாறுதல் தருவேன்."
ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai